கோடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கோடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 125 | 10-11-2025 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 125 | 10-11-2025 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

# எஸ்ஐஆர்க்காக வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் குழப்பங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு



சென்னை: நவ.10–

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்காக வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் ஏராளமான பிரச்சினைகளும் குழப்பங்களும் இருப்பதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது: நம்முடைய தொடர் எதிர்ப்புகளையும் மீறி சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கிவிட்டன. பெரும்பாலான மக்களுக்கு சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) பற்றி இன்னமும் முழுதாக தெரியவில்லை.

சரியான, உண்மையான வாக்காளர் பட்டியல்தான் நியாயமான தேர்தலுக்கு அடிப்படை. எனவே, வாக்காளர் பட்டியல் திருத்தத்தை திமுக எதிர்க்கவில்லை. ஆனால், போதுமான கால அவகாசம் கொடுக்காமல் தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் இதை அவசர அவசரமாக செய்வது சரியாக இருக்காது என்பதுதான் நமது நிலைப்பாடு.

தேர்தல் ஆணையத்தோடு கூட்டு சேர்ந்து வாக்காளர் பட்டியலில் பாஜக எப்படி எல்லாம் மோசடி செய்துள்ளது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பத்திரிகையாளர் சந்திப்பு மூலம் விளக்கி இருக்கிறார்.

கேரள முதல்வர் பினராயி விஜயனும், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் கூட எஸ்ஐஆர் ஐ தீவிரமாக எதிர்க்கிறார்கள். நாமும் எஸ்ஐஆர் அறிவித்த உடனே இது சதி என உணர்ந்து எதிர்த்தோம். கூட்டணி கட்சிகளோடு கலந்து பேசினோம். அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி தீர்மானம் நிறைவேற்றினோம். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறோம். வரும் 11ம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளோம்.

அதற்கு முன்பாக, எஸ்ஐஆர்க்காக வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் எத்தனை பிரச்சினைகள், குழப்பங்கள் இருக்கின்றன என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எனக்கும் கணக்கீட்டு படிவம் கொடுத்திருக்கிறார்கள். உங்களில் சிலரிடமும் இந்த படிவம் இந்நேரம் வந்து சேர்ந்திருக்கும்.

இதில் முதலில் நமது விவரங்களைக் கேட்கிறார்கள். அடுத்தாக, முந்தைய வாக்காளர் திருத்தப் பட்டியலில் உள்ள வாக்காளரின் உறவினரின் பெயர் கேட்கப்பட்டிருக்கிறது. உறவினர் என்றால் யார் என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. அப்பாவா, அம்மாவா, அண்ணனா, தங்கையா, கணவனா, மனைவியா, பிள்ளைகளா யார்? எல்லோரும்தானே வாக்காளர் பட்டியலில் இருப்பார்கள். இதில் ஏதாவது தெளிவு இருக்கிறதா?

வாக்காளரின் உறவினர் பெயர் என சொல்லப்பட்டுள்ள இடத்தில் முதலில் பெயரும் அடுத்ததாக வாக்காளரின் புகைப்பட அடையாள அட்டை எண்ணும் கேட்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக மீண்டும் உறவினர் பெயர் கேட்கப்பட்டுள்ளது. முதலில், யார் பெயரை எழுத வேண்டும்? எந்த வாக்காளர் விண்ணப்பிக்கிறாரோ அவர் பெயரா அல்லது உறவினர் பெயரா?

சிறிய தவறு இருந்தால்கூட வாக்காளர் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் பெயரை நீக்கும் ஆபத்தும் உள்ளது. நினைத்துப் பார்க்கவே அச்சமாக உள்ளது. நன்றாகப் படித்து பெரும் பொறுப்புகளில் இருப்பவர்கள்கூட இந்த கணக்கீட்டுப் படிவத்தைப் பார்த்தால் அவர்களுக்கும் தலை சுற்றும்.

இந்த படிவித்தில் வாக்காளரின் புகைப்படத்தை அச்சிட்டு தற்போதைய புகைப்படத்தை ஒட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மாநில தேர்தல் அதிகாரி, உங்களுக்கு விருப்பம் இருந்தால் ஒட்டலாம் என்று அரசியல் கட்சிகள் பங்கேற்ற கூட்டத்தில் சொல்லி இருக்கிறார். இது மற்றுமொரு இடியாப்ப சிக்கல்.

ஒருவேளை போட்டோ ஒட்டவில்லை என்றால் என்ன நடக்கும்? வாக்குரிமை பறிக்கப்படுமா, படாதா? தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரி அதாவது இஆர்ஓ கையில்தான் இந்த முடிவு உள்ளது. இவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான முடிவை எடுப்பார்கள் என்று சொல்ல முடியாது. இப்படி முதல் கோணல் முற்றிலும் கோணல் என்கிற கதையாக எல்லா இடத்திலும் குழப்பம்தான்.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சில அதிமேதாவிகள், இந்த எஸ்ஐஆர் பணிகளை நடைமுறைப்படுத்துவது மாநில அரசின் பணியாளர்கள்தான் எனும்போது ஏன் திமுக எதிர்க்க வேண்டும் என்ற புரிதலற்ற உண்மைக்குப் புறம்பான விவரங்களை வைத்துப் பேசுகிறார்கள். ஒரு பணியாளரை தேர்தல் ஆணையம் தனது பணிக்காக எடுத்த நொடியில் இருந்தே அவர் தேர்தல் ஆணையத்துக்கு கட்டுப்பட்டுத்தான் செயல்படுவாரே ஒழிய, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க மாட்டார்.

மக்களை திசை திருப்பினால் போதும் என தவறான தகவலை பரப்பக்கூடாது. எதையாவது பொய் சொல்லி எப்படியாவது எஸ்ஐஆர்ஐ நடத்திடலாமா, ஏழை எளிய மக்களின் வாக்குரிமையை நீக்கிடலாமா என்று எதிர்க்கட்சிகள் நினைப்பது வேதனைக்குரியது.

எஸ்ஐஆர் தொடங்கிய நாளில் இருந்து களத்தில் இருக்கும் திமுகவினரும் நிறைய பிரச்சினைகளை நமது கவனத்துக்கு கொண்டு வருகிறார்கள். பிஎல்ஓக்கள் வருவதில்லை, வந்தாலும் போதுமான எண்ணிக்கையில் கணக்கீட்டுப் படிவங்களைக் கொண்டு வருவதில்லை, நாள் ஒன்றுக்கு 30 படிவங்களுக்கு மேல் தருவதில்லை.

இந்த லட்சணத்தில் ஒரு தொகுதியின் இஆர்ஓ 3 லட்சத்துக்கும் மேற்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை இத்தனை குறுகிய கால அவகாசத்தில் எப்படி கொடுத்து வாங்குவார்கள்? வாங்கிவிட்டால் வேலை முடிந்ததா? அதுவும் இல்லை. அதை கணிணி மயமாக்கி வரும் டிசம்பர் 7ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும். போகிற போக்கைப் பார்த்தால் எப்படி இதையெல்லாம் செய்து முடிக்கப் போகிறார்கள் என்று தோன்றுகிறது.

திமுகவும், கூட்டணி கட்சிகளும் தொடர்ந்து சொல்வது போல அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் நீக்கப்படுவார்கள் என்ற அச்சம் இதன்மூலம் உறுதியாகிறது. பிஎல்ஓக்கள் தங்கள் பணிகளை சரிவர செய்யவில்லை என்றால் இந்த எஸ்ஐஆர் பணியே மொத்தமாக பாதிப்பை சந்திக்கும். பிஎல்ஓக்களும் கட்சியின் பிஎல்ஓ2க்களும் இணைந்து செயல்பட தேவையான அனைத்தையும் செய்வோம் என தேர்தல் ஆணையம் கூறியது. ஆனால், அதற்கான ஒரு சூழலை அவர்கள் இதுவரை உருவாக்கவில்லை. திமுக பிஎல்ஓ2 தயாராக இருந்தாலும்கூட பல இடங்களல் பிஎல்ஓக்கள் வராமல் இருக்கிறார்கள்.

இதையெல்லம் மீறித்தான் நமது செயல்வீரர்கள் விழிப்பாக செயல்பட்டு வருகிறார்கள். உங்கள் வாக்கு நீக்கப்படுமா என்று கேட்டால், அப்படி ஒரு அபாயம் நிச்சயம் இருக்கிறது. இல்லை என்று சொல்லிட முடியாது. அதை தடுக்க வேண்டும் என்றால் உங்கள் பகுதிக்குரிய பிஎல்ஓ யார் என்று கேட்டு அவரிடம் இருந்து கணக்கீட்டுப் படிவத்தை வாங்கி சரியாக நிரப்பி திரும்ப சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான ஒப்புகைச் சீட்டையும் மறக்காமல் வாங்க வேண்டும். இதுதான் உங்கள் வாக்குரிமையை பாதுகாக்கும்.

வாக்குரிமைதான் ஜனநாயகத்தின் அடிப்படையான மறுக்க முடியாத உரிமை. தற்போதைய நிலையில் எஸ்ஐஆர்ல் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதை எதிர்கொள்ள திமுக சார்பில் உதவி மையம் அமைத்துள்ளோம். இது திமுகவினருக்கு மட்டும் அமைத்திருக்கும் உதவி மையம் அல்ல. எல்லோருக்குமானது.

எனவே, திமுக நிர்வாகிகள் மட்டுமல்லாமல், எஸ்ஐஆர்ல் பாதிக்கப்படக்கூடிய அனைத்து பொதுமக்களும் நாங்கள் அறிவித்திருக்கக்கூடிய 08065420020 என்ற உதவி எண்ணை தொடர்பு கொண்டு உங்கள் சந்தேகத்தை தீர்த்துக்கொள்ளலாம். உங்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களைப் பெறலாம்.

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காக்க திமுக உங்கள் தோழனாக துணை நிற்க தயாராக இருக்கிறது. நமது வாக்குரிமையை பறிக்கக்கூடிய ஆபத்து நமது வாசல் தேடி வந்துவிட்டது. அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு விழிப்போடு இருந்து தமிழ்நாட்டில் ஜனநாயகம் படுகொலை செய்யப்படாமல் பாதுகாப்போம். நமது வாக்குரிமையை நிலைநாட்டுவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்த ஆயுத விநியோகம், சதி திட்டம் தீட்டிய 3 பேர் குஜராத்தில் கைது




"ஆமதாபாத், நவ.10–

குஜராத்தின் ஆமதாபாத் நகரில் பயங்கரவாத ஒழிப்பு படையினர் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டதில் சந்தேகத்திற்குரிய வகையிலான 3 பேர் அதலாஜ் சுங்க சாவடி அருகே கைது செய்யப்பட்டனர். அவர்கள் அகமது மொஹியுதீன், ஆசாத் சுலேமான் ஷேக் மற்றும் முகமது சுஹேல் சலீம்கான் என அடையாளம் காணப்பட்டு உள்ளனர். அவர்களிடம் இருந்து 2 கிளாக்ரக கைத்துப்பாக்கிகள், பெரட்டா ரக கைத்துப்பாக்கி ஒன்று, 30 தோட்டாக்கள் மற்றும் 4 லிட்டர் ஆமணக்கு எண்ணெய் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் 3 பேரும் ஆயுத விநியோகம் செய்தபோது பிடிபட்டு உள்ளனர். நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் தாக்குதல் நடத்த சதி திட்டம் தீட்டியது தெரிய வந்துள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீரின் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடியாக நடந்த ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையின்போது பயங்கரவாத இலக்குகள் தகர்த்து அழிக்கப்பட்டன.

அது நடந்து 6 மாதங்களுக்கு பின்னர், புதிய வடிவிலான ஒருங்கிணைந்த தாக்குதல்களை மேற்கொள்ள லஷ்கர்இ தொய்பா மற்றும் ஜெய்ஷ் இ முகமது ஆகியவை சதி திட்டமிட்டு உள்ள அதிர்ச்சிக்குரிய தகவல்கள் சமீபத்தில் வெளிவந்தன. இதுதொடர்பான உளவு தகவலின்படி, பயங்கரவாத குழுக்களின் ஊடுருவல், எல்லை கடந்து ஆயுத தளவாடங்களை கடத்தி கொண்டு வருதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. எல்லை கட்டுப்பாட்டு கோட்டின் வழியேயான இந்த ஊடுருவலுக்கு பாகிஸ்தானின் சிறப்பு சேவை குழு உதவியுள்ளது. அதன் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பும் கூட ஆதரவளித்து உள்ளது என்றும் தெரிய வந்துள்ளது. இது தவிர, இந்திய பகுதிகளை பயங்கரவாதி ஷாம்ஷெர் தலைமையிலான லஷ்கர்இ தொய்பா குழு, டிரோன்கள் உதவியுடன் வான்வழியே ஆய்வு செய்துள்ளது. எல்லை கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில், தாக்குதலுக்கு சாத்தியப்பட்ட இடைவெளி பகுதிகளை அடையாளம் காணுதலும் நடந்துள்ளன. இதனால், வருகிற வாரங்களில் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியங்கள் உள்ளன என 4 நாட்களுக்கு முன் உளவு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த சூழலில், நாடு முழுவதும் பயங்கரவாத தாக்குதல்களை நடத்த சதி திட்டம் தீட்டிய 3 பேர் குஜராத்தில் கைது செய்யப்பட்டு உள்ளனர்.",

# காற்று மாசுவால் ஏற்படும் துயரம்: தம் அடிக்கும் பழக்கம் இல்லாத இளைஞர்களுக்கும் புற்றுநோய்: 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் பாதிப்பு

உலகளவில் புற்றுநோய் மரணங்கள் வரும் 2050ம் ஆண்டுக்குள், தற்போதுள்ளதை விட 75 சதவீதம் வரை அதிகரிக்கும் என 'லான்செட்' மருத்துவ இதழ் வெளியிட்டுள்ள ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. இதன்மூலம், ஆண்டுக்கு 1.86 கோடி பேர் உயிரிழப்பார்கள் என்றும், புதிதாக 3.05 கோடி பேர் புற்றுநோயால் பாதிக்கப்படுவார்கள் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. உலக மக்கள் தொகையின் பெருக்கம், வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களே இந்த அபாயகரமான உயர்வுக்கு முக்கிய காரணங்களாகக் கூறப்பட்டுள்ளன.

குறிப்பாக, இந்தியா போன்ற குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் தான் பாதிப்புகளும், உயிரிழப்புகளும் அதிகமாக இருக்கும் என்றும் அந்த ஆய்வில் எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி, கடந்த 1990 முதல் 2023ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு விகிதம் 26.4 சதவீதம் அதிகரித்துள்ளது. இங்கு ஏற்படும் புற்றுநோய்களில் 70 சதவீதம் வரை, வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் தடுக்கக் கூடியவையே என்று ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புகையிலை, மதுப்பழக்கம், ஆரோக்கியமற்ற உணவு, உடல் பருமன், உடற்பயிற்சியின்மை, காற்று மாசுபாடு போன்றவையே இந்தியாவில் புற்றுநோய் அதிகரிக்க முக்கிய காரணிகளாகும். மேலும், நோய் கண்டறிவதில் ஏற்படும் தாமதம் மற்றும் தரமான சிகிச்சை கிடைப்பதில் உள்ள சவால்களும் இறப்பு விகிதத்தை அதிகரிக்கின்றன.

எனவே, வாழ்க்கை முறையை மாற்றுவதன் மூலமும், ஆரம்பக்கட்டத்திலேயே நோயைக் கண்டறியும் வகையில் தொடர்ச்சியான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலமும் பெரும்பாலான புற்றுநோய் பாதிப்புகளையும், மரணங்களையும் தடுக்க முடியும் என மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர். இது ஒருபுறம் இருக்க, நாட்டில் உள்ள பெருநகரங்களில் புற்றுநோயால் டெல்லி மக்களே அதிகம் பாதிக்கப்படுவதாகவும் மற்றொரு ஆய்வில் தெரிய வந்துள்ளது. பெருநகரங்களில் மிகவும் அதிகப்பட்சமாக டெல்லியில் ஒரு லட்சம் பேரில் 146 பேருக்கு புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, நுரையீரல் புற்றுநோய் அதிகரித்துள்ளது. டெல்லியில் நிலவும் அதிகப்படியான காற்று மாசுவே இதற்கு காரணம். கடந்த 2018ம் ஆண்டுகளில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நுரையீரல் புற்றுநோயாளிகளில் 90 சதவீதம் பேர் புகைப்பிடிக்கும் பழக்கத்தை கொண்டவர்களாக இருந்தனர். தற்போது, புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்களும் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படுவது அதிகமாகி உள்ளது.

தற்போது அறுவை சிகிச்சை செய்யப்படும் நுரையீரல் புற்றுநோயாளிகளில் 70 சதவீதம் பேர் புகைபிடிக்கும் பழக்கம் இல்லாதவர்கள். இவர்கள் பெரும்பாலும் 50 வயதுடையவர்களாக உள்ளனர். அதேபோல், 30 வயதுக்கு உட்பட்ட புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்களும் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என்கிறது அந்த ஆய்வு அறிக்கை.

# ஆனைமலைஸ் ஐசர் புதிய ஷோரூம் - சர்வீஸ் மையம் கோவை அரசூரில் திறப்பு!!



கோவை நவம்பர்:10

கனரக வாகனத் துறையில் முன்னணி நிறுவனமான ஐசர் வாகனங்களின் புதிய விற்பனை மற்றும் சேவை மையம், ஆனைமலைஸ் மொபிலிட்டியின் கீழ் கோவையில் திறக்கப்பட்டது.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான வாகன விற்பனை அனுபவம் கொண்ட ஆனைமலைஸ் குழுமங்களின் புதிய கிளையாக இந்த மையம் செயல்படுகிறது.

விழாவுக்கு ஆனைமலைஸ் குழுமங்களின் தலைவர் விக்னேஸ்வர் மற்றும் சித்தார்த் ஆகியோர் தலைமை தாங்கினர்..


ஐசர் நிறுவனத்தின் டீலர் டெவலப்மெண்ட் பொது மேலாளர் ராஜேஷ் குமரன், மற்றும் முக்கிய நிர்வாகிகள் சுஜன் சஹா, பங்கஜ் ஜெக்கா, அருண் சாத்தூர், ராதாகிருஷ்ணன், சர்மா, அரவிந்த், ஆனைமலைஸ் நிறுவனத்தின் முக்கிய நிர்வாகிகள் ராஜன் ஆறுமுகம், தரணி குமார், நந்த குமார் பங்கேற்றனர். வாடிக்கையாளர்கள் அக்பர் அல்டாப், பஷீர் மற்றும் பல வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

புதிய ஷோரூம் மற்றும் சர்வீஸ் மையம் ரிப்பன் வெட்டும் விழாவுடன் திறக்கப்பட்டது. ஐசர் நிறுவனத்தின் புதிய 'Pro X' சிறிய EV டிரக் விழாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மின்னணு வணிகம் மற்றும் கூரியர் சேவைகள் போன்ற நவீன தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விழாவில் புதிய ஐசர் வாகனங்களை வாங்கிய டிக்கையாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. "ஐசர் வாகனங்கள், கனரக வாகன விற்பனையில் முன்னணியில் உள்ளன. கோவையில் வணிக வாகன தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த புதிய மையம், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும்," என ஆனைமலைஸ் குழுமங்களின் தலைவர் விக்னேஸ்வர் தெரிவித்தார்..




கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் ஆகியோர் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா. உதயசூரியன், கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் இருந்தனர்.





தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு நெடுந்தூர ஓட்டப் போட்டிகள் நடைபெற்றது அரியலூர் விளையாட்டு அரங்கில் தொடங்கிய மாரத்தான் நெடுந்தூர ஓட்டப் போட்டிகளை அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பா மற்றும் ஜெயங்கொண்ட சட்டமன்ற உறுப்பினர் கண்ணன் அரியலூர் கோட்டாட்சியர் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

ஆண்களுக்கு 10 கிலோமீட்டர் தூரமும் பெண்களுக்கு 5 கிலோமீட்டர் தூரமும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

நெடுந்தோர் ஓட்டப் பொடிகளில் ஏராளமான மாணவ மாணவிகள் பொதுமக்கள் காவல்துறையினர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

ஆண்கள் பெண்களுக்கு முதல் பரிசாக 5,000 ரூபாயும் இரண்டாம் பரிசாக 3,000 ரூபாயும் மூன்றாம் பரிசாக 2,000 நான்கு முதல் பத்து இடம் பிடித்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது. போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

# குற்றம் சொல்லத்தான் செய்வார்கள், நிரபராதி என்று நிரூபியுங்கள். சேலத்தில் இபிஎஸ் பேச்சு.



சேலம், நவ. 10–

அதிமுகவின் 54ஆம் ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் ஓமலூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, 'பொதுமக்களும் நிர்வாகிகளும் தொண்டர்களும் விழிப்போடு இருந்து, தங்கள் வாக்குகளை வாக்காளர் பட்டியலில் பதிவுசெய்ய வேண்டும். திமுகவினர் திட்டமிட்டு அதிமுக வாக்காளர்களை இடம் பெறாமல் செய்துவிடுவார்கள். ஒவ்வொரு பூத்துக்கும் அதிகாரிகள் வருவார்கள், படிவம் வாங்கி முறையாக பதிவுசெய்து ஒப்படையுங்கள். எஸ்.ஐ.ஆரை திமுக கூட்டணி எதிர்க்கிறது. ஏனெனில் நகராட்சி, மாநகராட்சியில் கள்ள ஓட்டுப்போட்டுதான் ஜெயித்தனர். இறந்தவர்கள் எல்லாம் தேர்தலின்போது வந்துவிடுவார்கள். அவற்றை எல்லாம் நீக்குவதற்கு எஸ்.ஐ.ஆர் மிக முக்கியம்.

போலி வாக்காளர்களை நீக்கி தகுதி வாய்ந்தவர்களை வாக்காளர் ஆக்குவதுதான் இதன் சாராம்சம். இதை ஏன் எதிர்க்கிறீர்கள்? ஆளும் கட்சி திமுக அரசு அதிகாரிகள் தான் வருகிறார்கள். இதை எதிர்ப்பது போல் தோற்றத்தை ஏற்படுத்தி ஒருபக்கம் எதிர்த்து, ஒருபக்கம் வீடு வீடாக வந்து படிவத்தை கொடுக்கிறார்கள். அப்படி பி.எல்.ஏ 2 படிவத்தை கொடுக்க கூடாது.

தேர்தல் ஆணைய அதிகாரி தான் கொடுக்க வேண்டும். இது முக்கியம். அதை முறையாகப் பார்க்கவேண்டும். இல்லையெனில் திமுகவினர் தில்லுமுல்லு செய்வார்கள். டெல்டாவில் குறுவை சாகுபடி செய்த விவசாயிகளின் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை, நெல் மணிகள் முளைத்துவிட்டது. நான் நேரடியாக சென்று பார்த்தேன். விவசாயிகள் கண்ணீர் விட்டனர். இதற்கெல்லாம் முடிவு கட்டும் தேர்தல் 2026 தேர்தல்.

ஸ்டாலின் அவர்களே, ஆட்சி வேண்டுமானால் நீங்கள் செய்யலாம், சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அதிமுகதான் ஆட்சி செய்கிறது. சேலம் அதிமுக எஃகு கோட்டை. 2011ல் 100க்கு 100% வென்றோம், 2016ல் வென்றோம், 2021ல் 11 தொகுதிகளில் 10 தொகுதிகளை வென்றோம். தமிழகத்தில் இரட்டை இலக்கத்தில் வென்ற ஒரே மாவட்டம் சேலம் மாவட்டம். உள்ளாட்சியில் பணி நியமனம். பணியாணை வழங்குவதில் ஊழல். இதை இன்று வரை மறுக்கவில்லை. அந்த அமைச்சர் நேரு, டெல்டா இதை இன்று வரை மறுக்கவில்லை. அமைச்சர் நேரு, 'என்னைத்தான் குற்றம் சுமத்திக்கொண்டு இருக்கிறார்கள்' என்கிறார். ஆம் தவறு செய்தால் குற்றம் சொல்லத்தான் செய்வார்கள், நிரபராதி என்று நிரூபியுங்கள்.

நான்கு அதிகார மையங்கள் தமிழகத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் லஞ்ச லாவண்யம் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு திமுக அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் நிதியமைச்சராக இருந்த பழனிவேல் தியாகராஜன் ஒரு கருத்தைச் சொன்னார். அந்த ஆடியோ எல்லா மீடியாவிலும் வந்தது. இதுவரை ஸ்டாலின் மறுக்கவில்லை, எதிர்க்கவில்லை. சபரீசனும், உதயநிதி ஸ்டாலினும் சுமார் 30 ஆயிரம் கோடியை கையில் வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னார். ஆக கொள்ளையடிப்பது தான் அவர்களுடைய குறிக்கோள். ஒரு அமைச்சரே சொல்கிறார் என்று சொன்னால் அது உண்மைதானே?' என்றார்.

# திருவள்ளூரில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் திங்கட்கிழமை தூய்மை பணியாளர்களுக்கு குறை தீர்க்கும் நாள் கூட்டம் : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல் :

திருவள்ளூர் நவ 10 :

திருவள்ளூர் மாவட்டத்தில், தூய்மை பணியாளர்களுக்கு குறை தீர்க்கும் நாள் கூட்டம் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் இனி வருகின்ற ஒவ்வொரு மாதமும் மூன்றாம் திங்கட்கிழமை அன்று 12 மணி முதல் 1 மணி வரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஆட்சியர் குறைதீர் நாள் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தூய்மை பணியாளர்களின் குறைகளை நேரில் கேட்டறிந்து அதன் மீது தீர்வுக்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் இக்கூட்டத்தில் ஆவடி ஆணையர், திட்ட இயக்குநர், இணை இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நகராட்சி ஆணையர்கள், உதவி இயக்குனர் (ஊராட்சிகள்), பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், பேரூராட்சி செயல் அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மற்றும் தூய்மை பணியாளர்கள் இந்த குறைகேட்பு கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவும் மேலும் அவர்கள் கட்டுபாட்டின் கீழ் பணிப்புரியும் தூய்மை பணியாளர்களை தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# திருச்செந்தூர் கோயில் வளாகத்தில் பக்தர்கள் இரவில் தங்க அனுமதி: நிர்வாகம் அறிவிப்பு

திருச்செந்தூர்: நவ.10–

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபட்டு செல்கின்றனர். இந்நிலையில் கோயிலில் கடந்த ஜூலை 7ம் தேதி கும்பாபிஷேகம் நடந்த பிறகு தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. அதிலும் வார விடுமுறை நாட்களிலும், நாள்தோறும் அதிகாலையில் நடைபெறும் விஸ்வரூப தரிசனத்திலும் சுவாமி தரிசனம் செய்வது அதிகரித்துள்ளது.

இதை கருத்தில் கொண்டு கோயிலுக்கு வரும் பக்தர்கள் இரவில் கடற்கரை, கோயில் வளாகங்களில் தங்கி மறுநாள் அதிகாலையில் எழுந்து கடலில் புனித நீராடி சுவாமி தரிசனம் செய்கின்றனர். தற்போது கோயிலில் பெருந்திட்ட வளாகப்பணிகள் நடந்து வருகிறது. இதில் கோயில் வளாகமே புனரமைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக கோயில் வளாகத்தில் ஆங்காங்கே மின் விளக்குகள், மின்விசிறி வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, பக்தர்கள் இரவு நேரத்தில் கடற்கரையில் தங்குவதை தவிர்த்து கோயில் வளாகத்தில் தங்கிடுமாறு திருக்கோயில் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. இதன் பேரில் நேற்று முன்தினம் இரவு கடற்கரையில் தங்கி இருந்த பக்தர்களை தனியார் பாதுகாப்பு பணியாளர்கள் அங்கிருந்து கோயில் வளாகத்தில் தங்கிட செல்லுமாறு ஒலிபெருக்கியில் தெரிவித்தனர். இதையடுத்து பக்தர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு கோயில் வளாகத்தில் தங்கி நேற்று அதிகாலையில் சுவாமி தரிசனம் செய்தனர்.

* கடற்கரையில் இரவு தங்க தடை இல்லை காவல்துறை அறிவிப்பு

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக காவல்துறையினர் இரவு, பகல் பாராமல் தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வடகிழக்கு பருவமழை அல்லது திடீர் கனமழையின் காரணமாக அந்த நேரத்தில் மட்டும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு திருச்செந்தூர் கோயில் கடற்கரையில் தங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு கோயில் வளாகத்தில் பாதுகாப்பாக தங்குவதற்கு அறிவுறுத்தப்படுகிறது. எனவே தற்போது கடற்கரை பகுதியில் தங்குவதற்கு எந்தவிதமான தடையும் அறிவிக்கப்படவில்லை என காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவை வடவள்ளி வித்யாலயா பள்ளியில் போதைப் பொருள் ஒழிப்பு பேரணி




கோவை நவ:10

கோவை மாவட்டம் வடவள்ளியில் செயல்பட்டு வரும் வித்யாலயா பள்ளியில் போதைப்

பொருள் ஒழிப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியானது கல்வீரம்பாளையம் சந்திப்பில் தொடங்கி பள்ளி வரை நடைபெற்றது.

பேரணியை சிறப்பு விருந்தினர் மருத்துவர் ரேவதி ஹரிஹரன் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் பாலமுருகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

மாணவர்களின் வழிப்பாட்டு பாடல், கலை நிகழ்ச்சிகளுடன் பள்ளியின் தாளாளர் நிர்மல் குமார் ஜெயின் மற்றும் பள்ளி முதல்வர் உமாதேவி, துரைசாமி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி ஆசிரியர்களின் துணையோடும், காவல் துறை அதிகாரிகளின் பெரும் உதவியாளும் இப்பேரணி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இப்பேரணியில் மாணவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு போதை ஒழிப்போம் என்று கோஷங்களை எழுப்பியும், போதைப் பொருள் குறித்து விழிப்புணர்வு நாடகம் நடத்தியும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் மாணவ மாணவியர் ஆசிரியர் பெருமக்கள் காவல் ஆய்வாளர் காவலர்கள் அனைவரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி முதலியார்பேட்டையில் பெரிய ஆழமான வாய்க்காலில் அடிபட்டு சுய நினைவிழந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த நாய் ஒன்றை பாஜக பிரமுகர் வெற்றிச்செல்வம் காப்பாற்றினார்.



புதுச்சேரி, நவ. 10–

புதுச்சேரி முதலியார்பேட்டை புவன்கரே வீதி, விடுதலை நகர் பகுதியில் பெரிய, ஆழமான, ஆபத்தான வாய்க்கால் ஒன்றில் நாய் ஒன்று அடிபட்ட நிலையில் சுயநினைவின்றி விழுந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது.

அந்தப் பகுதியில் சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வு(SIR ) பணி சம்பந்தமான வேலையில் பாரதிய ஜனதா கட்சி நிர்வாகி க. வெற்றிச்செல்வம் ஈடுபட்டிருந்தபோது, ஆபத்தான நிலையில் இருந்த வாயில்லா ஜீவன் நாயின் நிலையை பார்த்து அதை மீட்கும் பணியில் இறங்கினார்.

வாய்க்கால் அருகில் விடுதலை நகர் பகுதியை சார்ந்த கலையரசன், ஆட்டோ ஓட்டுநர் ராஜ், அஞ்சலிதேவி, மாஸ்டர்ராஜி,கணேசன்,ஹேமச்சந்திரன் ஆகியோ உதவியுடன் வாய்க்காலில் இருந்த நாய்க்கு முதலுதவி செய்து, மயக்கம் தெளிவித்து கயிறு கட்டி மிகவும் ஆபத்தான சறுக்கலான வாய்க்காலில் இருந்து மேலே கொண்டு வந்து மீட்கப்பட்டது. நாய்கள் மீட்கும் குழுவான வாயில்லா ஜீவனுக்காக சேவை செய்யும் (Voice for Voiceless) இயக்கத்திற்கு தகவல் தெரிவித்து, ஆட்டோ ராஜ் உதவியுடன் சிகிச்சை அளிக்க நாய் அனுப்பி வைக்கப்பட்டது.

உயிருக்கு போராடிய வாயில்லா ஜீவன் நாய் மீட்பு பணியில் உடனே களம் இறங்கி, மனிதாபிமானத்தோடு அனைத்து உயிரும் சமம் என்ற எண்ணத்தில் சேவை புரிந்த பாஜக நிர்வாகி வெற்றிச்செல்வத்தை பொதுமக்கள் அனைவரும் பாராட்டினர்.

# சேலம் மேச்சேரி நீரேற்றுத்திட்டம் சொன்னீர்களே? ஞாபகம் இருக்கா?

## சேலத்தைப் பற்றி நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவு.



சேலம். நவ. 10–

சேலம் மேச்சேரி நீரேற்றுத் திட்டம், கொளத்தூர் தோணி மடுவுத் திட்டம், சேலம் சாணார்பட்டி மூலக் காடு சாம்பல் நீரேற்றுத் திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று 2021 தேர்தல் வாக்குறுதியில் சொன்னீங்களே, செஞ் சீங்களா முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினே?

மாம்பழம், மரவள்ளிக்கிழங்கு, காபி, சந்தனமரங்கள் எனப் பசுமை செழிக்கும் சேலம் மண்ணில் தேர்தல் வாக்குறுதியில் உள்ள ஒரு பாசனத் திட்டத்தைக்கூட நிறை வேற்றாமல், தண்ணீரின்றி பயிர்களைப் பாழ்படுத்தி விவசாயிகளைப் பறிதவிக்க விடுவது தான் “பொற்கால” ஆட்சியின் அம்சமா?

சேலம் மாநகரின் தண்ணீர் தேவையைக் கருத்தில் கொள்ளாமல், உலகுக்கே உணவிடும் உழவர் பெருமக்களின் நலனையும்இம்மியளவும் கருத்தில் கொள்ளாமல், கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் கிடப்பில் போட்டு சேலத்தைச் சிதைக்கும் இந்த திமுக அரசை சேலம் மக்கள் துரத்தி யடிப்பர் என்பது நிச்சயம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருவள்ளூரில் ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் அனைத்து கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான வட்டார அளவில் புத்தாக்கப் பயிற்சி :



திருவள்ளூர் நவ 10 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் அனைத்து கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான வட்டார அளவில் புத்தாக்கப் பயிற்சி நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை. ஜெயகுமார் தலைமை தாங்கினார்.

இதில் ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் ராஜவேல், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) யுவராஜ், உதவி திட்ட அலுவலர் (வீடுகள்) முத்துசுந்தரம், உதவி திட்ட அலுவலர் (ஊதியம் மற்றும் வேலை) பரிமளா, எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் மணிசேகர், கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகர், கடம்பத்தூர் பரிமளா, மற்றும் திருவாலங்காடு, எல்லாபுரம் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீனிவாசபுரம் பகுதியை சேர்ந்த வாக்காளர்களுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கணக்கெடுப்பு படிவத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாட்ட ஆட்சித்தலைவர் சரவணன், வீடு தோறும் சென்று வழங்கினார். கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் திருநாவுக்கரசு, கொடைக்கானல் நகராட்சி ஆணையர் சங்கர், கொடைக்கானல் வட்டாட்சியர் பாபு ஆகியோர் உட்பட பலர் உடனிருந்தனர்.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்ததிற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை சேலம் மாவட்டம் வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாழிக்கல்பட்டி அம்பேத்கர் நகர் பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர்\ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

# கடந்த 2002 மற்றும் 2005ம் ஆண்டின் வாக்காளர் விவரங்களை கண்டறிய இணையதள வசதி

## தமிழ்நாடு தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை: நவ.10–

கடந்த 2002 மற்றும் 2005ம் ஆண்டின் முந்தைய வாக்காளர் விவரங்களை கண்டறியும் வகையில் இணையதள வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கை: சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் கணக்கீட்டு படிவங்கள் விநியோகம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் அனைத்து பகுதிகளிலும் உள்ள வீடுகளுக்குச் சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கீட்டு படிவங்களை நேரடியாக வழங்கி வருகின்றனர். முந்தைய தீவிர திருத்தத்தின் வாக்காளர் விவரங்களை எளிதாக கண்டறிய வசதியாக இணையதள தேடல் வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரியின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://www.elections.tn.gov.in/-ல் தீவிர திருத்தம் 2002/2005 வாக்காளர் பட்டியலின் விவரங்கள் பொதுமக்கள் அணுகக்கூடிய வகையில் உள்ளிடப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் தங்களது பெயர் அல்லது வாக்காளர் அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்தி இத்தளத்தில் தங்கள் விவரங்களை தேடி கண்டறியலாம்.இவ்வசதி,நடைமுறையிலிருக்கும் சிறப்பு தீவிர திருத்தத்தில் பொதுமக்கள் சிரமமின்றி பங்கேற்க உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்நாடு தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# திருச்செந்தூரில் கடல் 100 அடி உள்வாங்கியது",

“திருச்செந்தூர்: நவ.10–

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் கோவில் முன்பு உள்ள கடலில் நீராடி சுவாமி தரிசனம் செய்வது வழக்கம்.இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக கோவில் முன்புள்ள கடல் அவ்வப்போது சீற்றத்துடனும், உள்வாங்கியும் காணப்படுகிறது.இந்த நிலையில் நேற்று கோவில் முன்புள்ள கடல் நாழிக்கிணறு பகுதியில் இருந்து அய்யா கோவில் வரை சுமார் 500 மீட்டர் தூரத்திற்கு சுமார் 100 அடி உள்வாங்கி காணப்பட்டது.கடல் உள்வாங்கி காணப்பட்டதால் கடலுக்குள் இருந்த பச்சை நிற பாசிப்படிந்த பாறைகள் அதிக அளவில் வெளியே தெரிந்தன. நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்த பக்தர்கள் பாறைகளின் மீது நின்று செல்பி எடுப்பதும், புகைப்படம் எடுத்தும் ரசித்து மகிழ்ந்தனர்.இதற்கிடையே கோவிலிலும் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. நீண்ட வரிசையில் சுமார் 4 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். “,

# சாலையில் தீப்பிடித்து எரிந்த சுற்றுலா வேன்: 16 பயணிகள் தப்பினர்

தேனி: நவ. 10–

பெரியகுளம் அருகே குமுளி திண்டுக்கல் நெடுஞ் சாலையில் சென்று கொண்டிருந்த வேனில் நேற்று மாலை திடீரென தீப்பிடித்து எரிந்தது. அதிலிருந்த 16 பயணிகளும் உடனடியாக கீழே இறங்கியதால் உயிர் தப்பினர். தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் இருந்து நேற்று மாலை பயணிகளை ஏற்றிக்கொண்டு திண்டுக்கல் நோக்கி சுற்றுலா வேன் சென்றுகொண்டிருந்தது. பெரியகுளம் அடுத்த எ.புதுப்பட்டி பகுதியில் குமுளி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சென்றபோது, வேனின் முன்பகுதியில் திடீரென புகை வெளியேறியது.

இதனால் பயணிகள் கலக்கம் அடைந்தனர். டிரைவர் சாதுர்யமாக செயல்பட்டு உடனடியாக சாலையோரம் வேனை நிறுத்தினார். இதையடுத்து, வேனில் இருந்து டிரைவர் மற்றும் 15 பயணிகளும் உடனடியாக கீழே இறங்கிவிட்டனர். அடுத்த சில நிமிடங்களில் வேன் தீப்பிடித்து எரிய தொடங்கியது. சிறிது நேரத்தில் வேன் முழுவதும் தீ மளமளவென பரவியது. தகவலறிந்த தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தண்ணீரைப் பீய்ச்சி அடித்து தீயை அணைத்தனர். இருப்பினும், வேன் முழுவதுமாக எரிந்து நாசமானது. இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வாக்காளர் பட்டியல் திருத்தம்: துணை தேர்தல் ஆணையர் ஆலோசனை



7 மாவட்டங்களில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து துணை தேர்தல் ஆணையர் கேட்டறிந்து ஆலோசனை மேற் கொண்டார்.

திருவண்ணாமலையில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான மண்டல அளவிலான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் நடை பெற்ற இந்த கலந்தாய்வுக் கூட்டத்துக்கு மத்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர் பானுபிரகாஷ் எத்துரு தலைமை வகித்தார்.

தலைமை தேர்தல் அதிகாரியும், அரசுச் செயலருமான அர்ச்சனா பட்நாயக், மத்திய தேர்தல் ஆணைய இயக்குநர் கே.கே.திவாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் க.தர்பகராஜ், கடலூர் மாவட்ட ஆட்சியர் சி.பி.ஆதித்யா செந்தில் குமார், தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஷ், கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், கள்ளகுறிச்சி மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த், திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்தரவல்லி, செய்யார் சார் ஆட்சியர் எல்.அம்பிகா ஜெயின், வருவாய்க் கோட்டாட்சியர்கள் ராஜ்குமார் (திருவண்ணாமலை), சிவா (ஆரணி), தனி வட்டாட்சியர் (தேர்தல்) தியாகராஜன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மத்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் எத்துரு, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் ஆகிய 7 மாவட்டங்களில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் விவரங்களை கேட்டறிந்து ஆலோசனைகளை வழங்கினார்.

# சேலம் மாவட்டம் ஏற்காடு முருகன்நகர் பகுதியில் மாபெரும் மருத்துவ முகாம் !







சேலம் மாவட்டம், ஏற்காடு முருகன்நகர் பகுதியில் மாபெரும் பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம் முகாமினை SPS இந்தியா பவுண்டேஷன், தேசாய் பவுண்டேஷன் டிரஸ்ட், SKS மருத்துவமனை மற்றும் வாசன் ஐ கேர் இணைந்து நடத்தினர்.

இம்மருத்துவ முகாமினை அருட்தந்தை. தனராஜ், SPS இந்தியா பவுண்டேஷன் இயக்குனர் தலைமையில், அருட்பணி. ஜேம்ஸ், திரெட்ரீட் , உதவி இல்ல தந்தை அவர்கள் இம்மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

இம் மருத்துவ முகாமில் முருக நகர் பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் பல கிராமங்களில் உள்ள பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் மருத்துவ முகாமிற்கு வருகை தந்து இரத்த அழுத்தம், சக்கரை அளவு, இரத்தசோகை அளவு, கண் பரிசோதனை,முழு உடல் பரிசோதனை,குழந்தைகளுக்கான சிகிச்சை, ,தோல் சம்பந்தமான மருத்துவம்,பெண்களுக்கான மகப்பேறு மருத்துவம்,பிசியோதெரபி சிகிச்சை என பலவிதமான பரிசோதனைகளை செய்து மக்கள் பயன் பெற்றுச் சென்றனர்.

# விடுமுறை தினத்தையொட்டி ஒகேனக்கல், ஏற்காட்டில் குவிந்த சுற்றுலா பயணிகள்: குடும்பத்துடன் பரிசல், படகு சவாரி சென்று உற்சாகம்



ஏற்காடு: நவ.10–

விடுமுறை தினமான நேற்று ஒகேனக்கல் மற்றும் ஏற்காட்டிற்கு சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகமாக இருந்தது.சேலம் மாவட்டத்தில் உள்ள ஏழைகளின் ஊட்டியான ஏற்காட்டுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். குறிப்பாக, பண்டிகை மற்றும் விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகமாக இருக்கும். கடந்த சில நாட்களாக ஏற்காட்டில் மழை பொழிவால், ‘ஜில்’ கிளைமேட் நிலவி வருகிறது. வழக்கமாக மாலையில் நிலவும் குளு குளு சீதோஷ்ண நிலையில் நண்பகலில் இருந்தே துவங்கி விடுகிறது. இரவில் கடும் குளிர் நிலவுகிறது.

ஞாயிறு விடுமுறை தினமான இன்று காலையில் இருந்தே சுற்றுலாப்பயணிகள் வரத்தொடங்கினர். பனி மூட்டத்தை ரசித்தவாறு கார், பைக்குகளில் சுற்றுலா பயணிகள் வந்தனர். இதனால் ஏற்காடு அண்ணா பூங்கா, தாவரவியல் பூங்கா, பகோடா பாயிண்ட், லேடீஸ் சீட், சேர்வராயன் கோயில், கிளியூர் நீர்வீழ்ச்சி உள்ளிட்ட பகுதிகளில் கூட்டம் அதிகமாக இருந்தது. குறிப்பாக, ஏற்காடு படகு இல்லத்தில், நீண்ட வரிசையில் காத்திருந்து படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பால், தள்ளுவண்டி கடைகள், ஓட்டல்களில் விற்பனை அதிகரித்தது.

இதேபோல் ஒகேனக்கல்லில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்கள், கர்நாடகத்தில் இருந்து இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அங்குள்ள முதலை பண்ணை, பூங்காவை ரசித்த பொதுமக்கள், எண்ணெய் மசாஜ் செய்து அருவிகளில் குளித்தும், குடும்பத்துடன் பரிசல் பயணம் செய்து காவிரியின் அழகை ரசித்தும் மகிழ்ந்தனர். அங்குள்ள மீன் வறுவல் கடை,ஓட்டல்களில் விற்பனை களை கட்டியது. மேட்டூர் அணை பூங்கா, இடைப்பாடி அடுத்த பூலாம் பட்டி, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, சேலம் குரும்பப் பட்டி உயிரியல் பூங்காவிற்கும் சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகமாக இருந்தது.



திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய அரசு பணியாளர் தனியார் குடியிருப்பு பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 கணக்கெடுப்பு படிவங்களை வாக்குசாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் வாக்குப்பதிவு அலுவலரும் ஆவடி மாநகராட்சி துணை ஆணையருமான மாரிசெல்வி, உதவி வாக்குப்பதிவு அலுவலரும் ஆவடி வட்டாட்சியருமான கண்ணன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் சாமிநாதனுக்கு வாழ்த்து



திமுக துணை பொது செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு. பெ சாமிநாதனுக்கு, ஈரோடு மாவட்ட திமுக பொருளாளர்,1, வது மண்டல குழு தலைவர் பி. கே பழனிசாமி நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

## வேகமாக நிரம்பி வரும் ஏரிகள்; பாசன கால்வாய் வசதி இல்லாததால் நீரில் மூழ்கிய விளை நிலங்கள்:

### ஏரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கால்வாய் அமைக்க விவசாயிகள் கோரிக்கை



திருத்தணி: நவ.10–

பருவமழைக்கு திருத்தணி பகுதியில் நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வரும் நிலையில், நீர் பிடிப்பு பகுதிகளில் பாசன கால்வாய்கள் வசதி இல்லாததால், மழைநீர் வீணாகி, விளைநிலங்கள் நீரில் மூழ்குவதால், பயிர் சாகுபடி செய்ய முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். ஏரிகள் நிறைந்த மாவட்டம் என்று சிறப்பு பெற்ற திருவள்ளூர் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக விவசாயம் விளங்குகிறது. ஆறு, ஏரி நீரை பயன்படுத்தி பெரும்பாலான விவசாயிகள் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர்.

நீர்நிலைகளில் மழைநீர் தேக்கி வைப்பதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து பயிர் சாகுபடி மற்றும் குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது. இந்நிலையில், வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால், திருத்தணி கோட்டத்தில் நீர்பாசனத்துறைக்கு சொந்தமான 79 ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றன. திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை ஆகிய பகுதிகளில் இதுவரை 36 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. இதில், ஆர்.கே.பேட்டையில் 20, திருத்தணியில் 12, பள்ளிப்பட்டில் 8 ஏரிகள் முழு கொள்ளளவை எட்டி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. ஏரிகள் நிரம்பினாலும், உபரி நீர் பாசன வசதிக்கான பாசன கால்வாய்கள் அடைக்கப்பட்டும், ஆக்கிரமிக்கப்பட்டதாலும் பெரும்பாலான பகுதிகளில் ஏரி உபரி நீர் வீணாகி விளை நிலங்களை மூழ்கடித்து வருவதால், விவசாயிகள் பயிர் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில், திருத்தணி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கனமழை பெய்தது. ஏரி பாசனத்தை கொண்டு ஏராளமான விவசாயிகள் பயிர் சாகுபடியில் ஈடுபடுகின்றனர். முப்போகம் விளைவிக்கும் பகுதிகளில் தண்ணீர் பாசனத்திற்கு தேவையான நீர் இருப்பில் இருந்தும் அதனை உரிய முறையில் பயன்படுத்த பாசன கால்வாய்கள் இல்லை. குறிப்பாக பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாசன கால்வாய்கள் இருந்த இடம் தெரியாமல் ஆக்கிரமிக்கப்பட்டு விவசாய நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது. இதனால், ஏரி நீர் கடைக்கோடி விளைநிலங்களுக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளது. இதனால், பெரும்பாலான ஏரிகளில் உள்ள தண்ணீர் நீர்பாசன பகுதிகளில் உள்ள விளை நிலங்களை மூழ்கடித்து பயிர்களை நாசம் செய்கிறது. எனவே, ஏரிநீர் வீணாவதை தடுக்கும் வகையில் பாசன கால்வாய் அமைக்க வேண்டும், என்று கோரிக்கைவிடுக்கின்றனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் இரண்டு நாள் கள ஆய்வுப் பயணம்!




புதுக்கோட்டை மாவட்டத்தில் 10.11.2025 அன்று காலை 11 மணியளவில் ரூ.767 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்றப் பணிகளைத் திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகள் வழங்கு கிறார்கள்! திருச்சி மாநகரில் பகல் 12.30 மணியளவில் ரூ.10 கோடியில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்திட 25 முதியோர் மனமகிழ் வளமையம் அன்புச் சோலை திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், நவம்பர்த் திங்கள் இரண்டு நாள் பயணமாக புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொள்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டைப்பற்றி தமிழ்நாட்டு மக்களைப் பற்றி தமிழ்ச் சமுதாய மக்களிடையே நிலவும் அரசியல், சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை பண்பாட்டுக்கூறுகளைப் பற்றி எல்லாம் நன்கறிந்தவர்கள்!

அதனால்தான், ஆட்சிப் பொறுப்பேற்ற நாள்முதல் தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை ஒவ்வொரு நாளும் உருவாக்கி நிறைவேற்றி வருகிறார்கள். குடும்பப் பணி ஒன்றே கடமையெனக் கொண்டு நாள்தோறும் உழைத்துவரும் மகளிர் மனவெழுச்சி கொள்ளும் வகையில் கட்டணமில்லாப் பயணத்திற்கு வழிவகுக்கும் "விடியல் பயணத் திட்டத்தை" அறிமுகப் படுத்தி; நாள்தோறும் 52 இலட்சத்திற்கு மேற்பட்ட மகளிர், மாணவியர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர் பயன்பெறச் செய்துள்ளார்கள். பிறர் கையை எதிர்பார்த்தே வாழ்ந்த இல்லத்தரசிகளின் சுயமரியாதையைக் காத்திட கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி 1 கோடியே 15 இலட்சம் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கி மற்ற மாநிலங்களும் பின்பற்றச் செய்துள்ளார்கள்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வாக்கிற்கு ஏற்ப ஒரு பள்ளி ஆய்வின்போது, சோர்ந்த முகத்துடன் இருந்த குழந்தைகளைக் கண்டு, வருந்தி வாடிய நெஞ்சத்தோடு அலுவலகம் வந்து அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, ஏறத்தாழ 20 இலட்சத்து 59 ஆயிரம் குழந்தைகள் பயன்பெறும் வகையில், "காலை உணவுத் திட்டத்தைப்" பள்ளிகளில் நடைமுறைப் படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் பஞ்சாப், தெலங்கானா, புதுச்சேரி மாநிலங்களிலும் கனடா, இங்கிலாந்து நாடுகளிலும் இத்திட்டத்தின் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். பள்ளிப்படிப்பை முடித்த மகளிர் அனைவரும் உயர்கல்வியைத் தொடர்வதில்லை என்பதை அறிந்தவுடன், அனைவரும் உயர்கல்வியைத் தொடர உதவும் வகையில் "புதுமைப்பெண் திட்டம்" தந்து மாதம் 1000 ரூபாய் வழங்கி எல்லோரும் உயர்கல்வி பெறச் செய்துள்ளார்கள்.

மாணவிகள் மட்டுமல்லாமல் மாணவர்களும் உயர் படிப்பைத் தொடர அவர்களுக்கும் மாதம் 1000 ரூபாய் தரும் "தமிழ்ப்புதல்வன்" திட்டத்தை அறிமுகப்படுத்தி இரண்டு திட்டங்களிலும் 10 இலட்சத்திற்கு மேல் மாணவ, மாணவியர் பயன்பெறச் செய்துள்ளார்கள். கல்விக்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையே யுள்ள வேறுபாடுகள் கவனத்திற்கு வரவே; அந்த வேறுபாட்டைக் களைந்து வேலைவாய்ப்புகள் கிடைத்திட வழிவகுக்கும் "நான் முதல்வன்" திட்டத்தை அறிமுகப்படுத்தி 41 இலட்சம் இளைஞர்களுக்குமேல் பயன்பெறச் செய்துள்ளார்கள்.

சாலை விபத்துகளில் உயிரிழப்போர் எண்ணிக்கை அறிந்து வேதனைப்பட்ட முதலமைச்சர் பாதிக்கப்படுவோரின் உயிர்களை உடனே காத்திட, "இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48" திட்டத்தை அறிமுகப்படுத்தி ஆயிரக் கணக்கான உயிர்களைக் காத்துள்ளார்கள். செலவில்லாமல் முழுஉடல் பரிசோதனைகள் செய்து மக்களின் நலன்களைக் காத்திட "நலன் காக்கும் ஸ்டாலின் திட்டம்".

நடுத்தர வயதுடையோரை அதிகம் பாதிக்கும் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் முதலிய தொற்றா நோய்கள் அவர்களைப் பற்றாமல் காத்திட "வீடுதேடி மருத்துவம் திட்டம்" கொரோனா காலம் முதல் தடைபட்ட கல்வியைக் குழந்தைகள் தொடர்ந்திட "இல்லம் தேடிக் கல்வித் திட்டம்" எனப் புதிய புதிய திட்டங்களைச் செயல்படுத்திப் பயன் விளைத்துள்ளார்கள்.

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெருகச் செய்திட தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் புதிய புதிய சிப்காட் தொழில் நிறுவனங்களை உருவாக்கி, "முதலீட்டாளர்களின் முதல் முகவரி" எனத் தொழில் முதலீட்டு மாநாடுகள் மூலம் தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்துத் தொழில்கள் பல வளர்க்கிறார்கள். இப்படிப் புதிய புதிய திட்டங்களைச் செயல்படுத்தி நாளொரு திட்டம், பொழுதொரு சாதனை என வளர்த்து வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவற்காக, வீடுகளில் உள்ள முதியவர்கள் மனம் சோர்வடையாமல் ஊக்கம் பெற உதவும் வகையில் தற்போது உருவாக்கியுள்ள புதிய திட்டம் "அன்புச்சோலை திட்டம்".

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, "அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வளமையம்" என்ற திட்டத்தை திருச்சி மாநகரில் 10.11.2025 அன்று பகல் 12.30 மணியளவில் தொடங்கி வைக்கிறார்கள்.

ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் மற்றும் ஒய்வூதியத் திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களைத் திராவிட மாடல் அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. தற்போது தொடங்கப் படும் "அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வளமையங்கள்" திட்டம் மூத்த குடிமக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியில் கவனம் செலுத்தும் வகையில் சமூக மையங்களாகச் செயல்படும்.

மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் தலா இரண்டு வீதம் 20 அன்புச்சோலைகள், தொழில்துறை மாவட்டங்களான இராணிப்பேட்டையிலும் கிருஷ்ணகிரியிலும் 2 அன்புச்சோலைகள், பெருநகர சென்னை மாநகராட்சியில் தண்டையார்பேட்டை, சோழிங்கநல்லூர், விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் 3 அன்புச் சோலைகள் என மொத்தம் 25 "அன்புச்சோலை" மையங்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு பொழுதுபோக்கு அம்சங்கள், யோகா, நூலகம் மற்றும் தேவையான திறன் மேம்பாடு சேவைகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்ப் பாரம்பரியத் தைப் பிரதிபலிக்கும் அன்புச்சோலைகள்'

அன்புச்சோலை திட்டம், முதியோர்கள் மதிக்கும் தமிழ்ப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கிறது. குடும்பங்கள் முதன்மைப் பராமரிப்பாளர்களாகத் தொடர்வதற்கு அரசாங்கம் இத்திட்டத்தின் மூலம் துணைபுரிகிறது.

முதலமைச்சர் அன்புச்சோலை குறித்து கூறுவது'

தமிழ்நாடு முதலமைச்சர் "முதியோர்கள்தான் சமுதாயத்தின் வழிகாட்டும் சக்தி. இன்றைய தமிழ்நாட்டை உருவாக்க தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள். கண்ணியத்துடனும், பராமரிப்புடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்வதை உறுதி செய்வது எமது கடமை.

அன்புச்சோலை மையம் மூத்த குடிமக்கள் நலன் கருதி பல்வேறு அம்சங்கள் கொண்டு, தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் பகலில் மட்டும் இயங்கும் மையமாகச் செயல்படும். ஒவ்வொரு மையமும் குறைந்தபட்சம் 50 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் போதிய இடவசதி, போதுமான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டிருக்கும். இந்தப் பகல்நேரப் பராமரிப்பு மையங்களில், முதியவர்கள் தோழமை மற்றும் அர்த்தமுள்ள செயல்பாடுகளில் ஈடுபடலாம். அன்புச்சோலை மையங்களுக்கு முதியோர்கள் சென்றுவர போக்குவரத்து வசதியுள்ள இடங்களில் தான் இம்மையங்கள் அமைக்கப்படுகின்றன.

அன்புச்சோலை மையங்களுக்கு வருகை தரும் முதியவர்களுக்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆதரவுடன் மதிய உணவு மற்றும் சிற்றுண்டி வழங்கப்படும். தகுதி வாய்ந்த பராமரிப்பாளர்கள் மற்றும் இயன்முறை சிகிச்சையாளர்கள் பணியமர்த்தப் பட்டு முதியோரின் விரிவான பராமரிப்பு உறுதி செய்யப்படும். அன்புச்சோலை மூலமாக, முதியோர் குடும்பப் பிணைப்பைத் தொடர்ந்தே, பாதுகாப்பான சூழலில், அர்த்தமுள்ளதாக பகல் நேரங்களைக் கழிக்க முடியும். இது, கருணை மிக்க மற்றும் சமூக நீதியினை உள்ளடக்கிய தமிழ்நாட்டிற்கான எமது அரசின் பார்வையைப் பிரதிபலிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரண்டு நாள் பயணமாக புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொள்கிறார்கள். முதலமைச்சர் புதுக்கோட்டை மாவட்டத்தில் 10.11.2025 திங்கள் கிழமை காலை 11 மணியளவில் கீரனூர் மூகாம்பிகை பொறியியல் கல்லூரித் திடலில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசின் சார்பில் இதுவரை ரூ.11,481 கோடி மதிப்பீட்டில் 38,35,669 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார்கள்.

ரூ. 2,800 கோடியில் 62,088 வளர்ச்சித் திட்டப் பணிகளை நிறைவேற்றியுள்ளார்கள். முதலமைச்சர் 10.11.2025 திங்கள் கிழமை காலை 11 மணியளவில் நடைபெறும் விழாவில் 767 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்தல் ஆகியவற்றுடன் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவி களையும் வழங்குகிறார்கள்.

## கீரனூரை சுற்றியுள்ள 9 டாஸ்மாக் மதுக் கடைகள் இன்று மூடல்

புதுக்கோட்டை: நவ.10–

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரை சுற்றியுள்ள 9 டாஸ்மாக் மதுக் கடைகள் நாளை மூடப்படுகிறது. கீரனூர் தனியார் கல்லூரியில் நடக்கும் நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பதை ஒட்டி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

## ஈரோடு வாக்காளர் தீவிர திருத்தம் பணி



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில், நடைபெற்ற 2026 சட்டமன்ற பொது தேர்தலுக்கான, சிறப்பு தீவிர வாக்காளர் சீர்திருத்த பணியினை ஈரோடு ஆட்சியர் சா. கந்தசாமி ஆய்வு செய்தார். தொடர்ந்து தீவிர வாக்காளர் சிறப்பு நிகழ்ச்சி குறித்து பொதுமக்களிடம் அவர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தார். உடன் கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421